National University Hospital

**Source:** Tamil Murasu, Page 2
**Date:** 11 April 2024

# நோன்புப் பெருநாள் கொண்டாட வழிசெய்த கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சை, ரத்த தானம்

மாற்று அறுவை சிகிச்சை, ரத்த மாற்ற சிகிச்சை ஆகியவற்றை செய்துகொண்டதால் அரிய வகை நாள்பட்ட கல்லீரல் நோயால் பாதிக்கப்பட்ட தெமாசெக் உயர்நிலைப்பள்ளி மாணவியான 14 வயது ஃபிலிஷா ஸாஃபிலினால் (படம்) ஏப்ரல் 10ஆம் தேதியன்று நோன்புப் பெருநாளைக் கொண்டாட முடிந்தது.

நூல்கள் வாசிப்பது, எழுதுவது என்றால் ஃபலிஷாவுக்கும் மிகவும் பிடிக்கும். தமது பள்ளியின் நாடகக் குழுவான ‘சீரியஸ் பிளே’யின் உறுப்பினராக அவர் இருக்கிறார்.

இருப்பினும், தமது உடல் நிலை காரணமாக அவரால் பள்ளி நடவடிக்கைகளில் எப்போதும் துடிப்புடன் செயல்பட முடியவில்லை.

ஃபலிஷா 6 வயதாக இருந்த போது அவருக்கு இந்த நோய் இருப்பது தெரியவந்தது.



ஃபலிஷா கிட்டத்தட்ட ஒன்றரை வயது குழந்தையாக இருந்தபோது அவரது மலத்தில் ரத்தம் இருந்ததை அவரது தாயாரான 45 வயது திருவாட்டி சித்தி சுபாய்டா முகம்மது ஷரிஃப் கண்டார். ஃபலிஷாவை அவர் கேகே மகளிர், சிறார் மருத்துவமனைக்குக் கொண்டு சென்றார். ஃபலிஷாவுக்குக் குடல் அழற்சி நோய் இருப்பது தெரியவந்தது.

இந்த நோய் தொடர்பாக ஃபலிஷாவுக்குத் தரப்பட்ட மருந்து எவ்வித பலனையும் தராததை அடுத்து, கேகே மகளிர், சிறார் மருத்துவமனையில் அவருக்குக் கல்லீரல் பரிசோதனை நடத்தப்பட்டது. அதில் அவருக்கு அரிய வகை கல்லீரல் நோய் இருப்பது உறுதியானது.

தேசிய பல்கலைக்கழக மருத்துவமனையிலும் அவருக்கு கல்லீரல் பரிசோதனை நடத்தப்பட்டது.

அவரது நோய் மோசமடைந்திருந்தது அதில் தெரியவந்தது.

குடல் அழற்சி நோய், அரிய வகை கல்லீரல் நோய் ஆகியவற்றால் பாதிக்கப்பட்டுள்ள ஃபலிஷா பல சிரமங்களை எதிர்கொண்டார்.

2022ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் ஃபலிஷாவுக்கு தேசிய பல்கலைக்கழக மருத்துவமனையில் கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சை செய்யப்பட்டது.

மாற்று அறுவை சிகிச்சைக்குப் பிறகு ஃபலிஷாவுக்கு ரத்த மாற்ற சிகிச்சைகள் தேவைப்பட்டன. அவற்றை அவர் செய்துகொண்டார்.

தமக்கு கல்லீரலைத் தானம் செய்தவருக்கு ஃபலிஷா நன்றி தெரிவித்துக்கொண்டார்.

Source: The Straits Times © SPH Media Ltd.
Permission required for reproduction